சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

# கணக்கீடு – 33 தரம் - 12

# Covid – 19 இடர் விடுமுறைகால பயிற்சி - 8

## தேர்ச்சி – 4.8 : வழுக்களைத் திருத்துதல்

வாரம் - 8
இரத்தினபுரி தமிழ் தேசிய கல்லூரி
தயாரிப்பு : சஜித்.sp
BBA(Financial Spl), University of Colombo

### வெளிகாட்டா வழு திருத்தம் - பயிற்சிகள்

**01.** அனி நிறுவனத்தில் ஏற்பட்ட கணக்கீட்டு வழுக்கள் பின்வருமாறு:
1) விற்பனை பட்டியல் ரூபா 20 000 ஏடுகளில் பதிவுசெய்யப்படவில்லை.
2) கிரயப் பட்டியல் ரூபா 15 000 தொடர்பாக நிறுவன புத்தகங்களில் எப்பதிவும் இடம் பெறவில்லை.
3) அமீருக்கான கடன்விற்பனை ரூபா 20 000 விற்பனை நாட்குறிப்பேட்டில் இரு முறை பதிவு செய்யப்பட்டது.
4) கொள்வனவு நாட்குறிப்பேடு ரூபா 10 000 எனும் தொகையினால் கூட்டிக்கூட்டப்பட்டது.
5) செலுத்திய மின்கட்டணம் ரூபா 7 000 காப்புறுதிக் கட்டணக் கணக்கில் பதியப்பட்டது.

**வேண்டப்படுவது:** திருத்தற் பதிவுகள்

**02.** சுதர்ஷன் நிறுவனமொன்றில் இடம்பெற்ற கணக்கீட்டு வழுக்கள் பின்வருமாறு:
1) விற்பனை நாட்குறிப்பேடானது ரூபா 12 000 எனும் தொகையினால் குறைத்து மதிப்பிடப்பட்டது.
2) வாடகைக் கணக்கில் ரூபா 6 000 அதிகமாகவும், விற்பனை தரகு கணக்கில் ரூபா 6 000 குறைவாகவும் காணப்பட்டது.
3) ரவிக்கு கொடுத்த கழிவு ரூபா 2 000 கணக்குகளில் இருதடவை பதியப்பட்டது.
4) அமீரிடம் பெற்ற காசு ரூபா 12 000 காசுபெறுவனவு நாட்குறிப்பேட்டில் காசு விற்பனை நிரலில் பதியப்பட்டது.
5) இயந்திர திருத்துதல் செலவு கொடுப்பனவு ரூபா 15 000 இயந்திரக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது.

**வேண்டப்படுவது:** திருத்தற் பதிவுகள்

**03.** தனிவியாபாரமொன்றை நடாத்திவரும் சுதேஷ் வணிகத்தில் இம்பெற்ற கணக்கீட்டு வழுக்கள் பின்வருமாறு:
1) ஜெகன் நிறுவனத்தில் வணிகப் பாவனைக்கு இயந்திரம் கடன்கொள்வனவு ரூபா 70 000 கொள்வனவு நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்பட்டது.
2) சுதேஷ் தனிப்பட்ட தேவைக்கு பற்றிய காசு ரூபா 12 000 மூலதனக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது.
3) சிவாவிடம் பெற்ற கழிவு ரூபா 7 500 தொடர்பாக காசுகொடுப்பனவு நாட்குறிப்பேட்டில் எவ்வித பதிவும் இடம்பெற்றிருக்கவில்லை.
4) சிராஜ் நிறுவனத்திடம் வணிகப் பாவனைக்கு ரூபா 40 000 தளபாடம் காசோலை மூலம் கொள்வனவு செய்யப்பட்டதானது கொள்வனவு நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்பட்டது.
5) விற்பனை பட்டியல் ஒன்றின் பெறுமானம் ரூபா 50 000 ஆனது, வியாபார கழிவு 10% நீக்காமலே விற்பனை நாளேட்டில் பதிவு செய்யப்பட்டது.

**வேண்டப்படுவது:** திருத்தற் பதிவுகள்

**04.** விவேக் நிறுவனத்தில் ஏற்பட்ட கணக்கீட்டு வழுக்கள் பின்வருமாறு:

1) விவேக் அவரின் சொந்த பணத்தில் நிறுவன வாடகை செலுத்தியதானது ரூபா 30 000 வாடகைக் கணக்கில் வரவிலும் காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் செலவிலும் ரூபா 3 000 என பதியப்பட்டது.
2) காசுபெறுவனவு நாட்குறிப்பேட்டின் கழிவு நிரலின் கூட்டுத்தொகை ரூபா 8 500 பொதுப்பேரேட்டில் 5 800 என மாற்றப்பட்டது.
3) வெளிதிரும்பல் நாட்குறிப்பேட்டின் கூட்டுத்தொகை ரூபா 15 000 ஆனது, பொதுப் பேரேட்டில் ரூபா 1 500 என பதிவு செய்யப்பட்டது.
4) உட்திரும்பல் நாட்குறிப்பேட்டின் கூட்டுத்தொகை ரூபா 16 000 ஆனது, பொதுப் பேரேட்டில் ரூபா 6 000 என பதிவு செய்யப்பட்டது.

**வேண்டப்படுவது:** திருத்தற் பதிவுகள்

**05.** அர்சாத் நிறுவனமொன்றில் இடம்பெற்ற கணக்கீட்டு வழுக்கள் பின்வருமாறு:

1) கொள்வனவு நாட்குறிப்பேடானது ரூபா 20 000 எனும் தொகையினால் குறைத்து மதிப்பிடப்பட்டது.
2) வாடகை வருமானக் கணக்கில் ரூபா 8 000 அதிகமாகவும், விற்பனை தரகு வருமானக் கணக்கில் ரூபா 8 000 குறைவாகவும் காணப்பட்டது.
3) சிவிக்கு கொடுத்த கழிவு ரூபா 4 000 கணக்குகளில் இருதடவை பதியப்பட்டது.
4) மீரரிடம் பெற்ற காசு ரூபா 22 000 காசுபெறுவனவு நாட்குறிப்பேட்டில் காசு விற்பனை நிரலில் பதியப்பட்டது.
5) தளாபட திருத்துதல் செலவு கொடுப்பனவு ரூபா 18 000 தளபாடக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது.

**வேண்டப்படுவது:** திருத்தற் பதிவுகள்

Sajith.SP